★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

மலர் [illegible] பங்குனி [illegible]8 நாள் 7 இதழ் [illegible]9
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 10-4-84

[LIBRA]RY OF JAFFNA, SRI LANKA 1[illegible]-4-84 PERIODICALS DIVISION

## வியாழன் அமைச்சர் லலித் புதுடில்லி போகிறார்

(கொழும்பு)

தேசியபாதுகாப்பமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி எதிர் வரும் வியாழக்கிழமை புதுடில்லி செல்லவுள்ளாரெனத் தெரியவருகிறது.

இவர் அங்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியைச் சந்தித்து இலங்கையின் வடக்கு, கிழக்கு நிலைமைபற்றி கலந்துரையாடவுள்ளார் என கூறப்படுகிறது.

இச்சந்திப்பின்போது இலங்கையின் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாணுமாறு இந்தியப் பிரதமர் அமைச்சர் அத்துலத்முதலியிடம் வற்புறுத்துவாரெனவும் தெரிவிக்கப்பட்டது.

# யாழ். நகரில் நேற்று ஏற்பட்ட திடீர் பதட்ட நிலை!

## குண்டுவெடிப்பு, துப்பாக்கி சூட்டுச் சம்பவங்கள்

### மக்கள் சிதறி ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் நகரில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் காரணமாக பெரும் பரபரப்பும் பதட்டமும் நிலவியது.

நேற்று பிற்பகல் சுமார் 2 மணியளவில் நகரின் ஒரு பகுதியில் கேட்ட ஒரு பெரும் வெடிச் சத்தத்தையடுத்து துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்படுவதும், யந்திரத் துப்பாக்கிகள் முழங்குவதும் பல மணி நேரம் வரை கேட்டுக் கொண்டிருந்தது.

வீதிகளிலிருந்த மக்கள் அவசர அவசரமாகப் புறப்பட்டுச் சென்றனர். கடைகள் இழுத்து மூடப்பட்டன. கார்களும், மினிபஸ்களும், ஏனைய வாகனங்களும் நகரிலிருந்து விரைந்து வெளியேறிக் கொண்டிருந்தன.

ஹெலிகொப்டர் விமானம் ஒன்று நகரின் ஒருபகுதியில் தாழப்பறந்து பல தடவைகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

நகரின் ஒரு பகுதியிலிருந்து புகை மண்டலம் ஆகாயத்தில் கிளம்பிக் கொண்டிருந்தது.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்கண்மையில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பொன்றில் இராணுவத்தினர் பயணஞ்செய்த 'ட்ரக்' வண்டி யொன்று முற்றாகச் சேதமடைந்தது. இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் இராணுவத்தினர் உட்பட பலர் காயமடைந்தனர். [illegible] இருவர் இறந்துள்ளனர் என்றும் தேசிய பாதுகாப்பமைச்சு அறிவித்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் இக்குழப்பநிலை ஏற்பட்டது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த தபால் புகையிரதத்துக்கு பாதுகாப்பு வழங்கி வந்த இராணுவ அணியொன்று யாழ்ப்பாணத்தில் முகாமுக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் போதே அந்த அணியின் ட்ரக் வண்டி தாக்கப்பட்டதாம்.

"நாட்டில் குழப்பநிலையை மீண்டும் ஏற்படுத்தும் விதத்தில் "பயங்கரவாதிகளால்" மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையே இக்குண்டு வெடிப்புச்சம்பவமாகும்" என்று தேசிய பாதுகாப்பமைச்சு அறிவித்தது. அவர்களின் நோக்கம் முறியடிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சு தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பிற்பகல் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற சிலமணி நேரத்தில் பெரும் பதட்டநிலை காணப்பட்டது. நகரின் மத்தியில் நின்ற மக்கள் பீதியுடன் சிதறி ஓடினர். வர்த்தகநிலையங்கள், வங்கிகள் யாவும் மூடப்பட்டன. பொதுமக்களில்பலர் வாகனங்கள் கிடைக்காததால்

(8ம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றம் விடுமுறைக்கு மூடப்பட்டது

(மாவிட்டபுரம்)

மல்லாகம் நீதிமன்றம் விடுமுறைக்காக மூடப்பட்டுள்ளது.

புதுவருடப் பிறப்பை யொட்டி மல்லாகத்தின் சகல நீதிமன்றங்களும் விடுமுறைக்காக மூடப்பட்டு மீண்டும் இப்மாதம் 23ம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது.

பாதிக்கப்பட்ட

## 680 ஆசிரியர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பவில்லை

### இ. த. ஆ. சங்கச்செயலாளர் மகாசிவம் தகவல்

(யாழ்ப்பாணம்)

'இதுவரை நிவாரணம் வழங்கப்படாத பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களுக்கு, இரண்டாம் தவணை ஆரம்பமாகுமுன் நிவாரணம் வழங்கப்படாவிடில் அடுத்து எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கை பற்றி முடிவு எடுக்க இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க ஆட்சிக் குழு அடுத்தவார ஆரம்பத்தில் கூடுகிறது

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் திரு த. மகாசிவம், சங்க [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

## தோட்டத்தொழிலாளர்வேலைநிறுத்தம்; இ. வ. ஊழியர்சங்கம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

1984 ஏப்ரல் 2-ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை ஆதரித்த இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் நிறைவேற்றுச் சபை, வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குத் தனது ஆதரவைத் தெரிவிக்கத் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"சனத்தொகையில் ஏனைய பகுதியினருக்குக் கிடைக்கும் ஏதாவது சமூக, சேமநல நன்மைகளை அரசாங்கம் வழங்குவதற்குத் தேவையான வருவாயின் பெரும் பகுதியைப் பெற்றுத்தருவது தோட்டத் தொழிலாளரின் உழைப்புச் சக்தியாக இருந்தாலுங்கூட இந்நாட்டின் தொழிலாளர் வர்க்கத்தினரில் மிகக்கடுமையான சுரண்டலுக்குள்ளாக்கப்பட்டுள்ளவர்கள் அவர்களே யாவர்.

"வேலைநிறுத்தத்திலீடுபட்டுள்ள சங்கங்களின் கோரிக்கைகளை நாம் பூரணமாக ஆதரிப்பதுடன், வேலைநிறுத்தத்திற்கு நியாயமான ஒரு தீர்வைக் காணும் நோக்குடன் அச்சங்கங்களுடன் அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுமாறு அரசாங்கத்தைக் கோருகிறோம்."

## வவனியாவில் ஒருவர் அடித்துக் கொலை

(வவனியா)

கடையில் தகராறு. அடுத்த நாள் இரவு வவனியா கண்டி வீதி மூன்று முறிப்பு என்ற இடத்தில் நபர் ஒருவர் அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

துரைராஜா தர்மலிங்கம் என்பவரே கொலை செய்யப்பட்டவர். இவர் குருநாகலைச் சேர்ந்தவர்.

கடை ஒன்றில் சிகரெட் வாங்கும் போது ஏற்பட்ட பிரச்னை கைகலப்பாக மாறியதாகவும், இவ்விடயத்தில் இறந்தவர் சம்பந்தப்பட்டதாகவும் பொலிஸ் விசாரணையின் போது தெரியவந்தது.

இக்கொலை தொடர்பாக

(8ம் பக்கம் பார்க்க)

வவனியாவில்

## தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர் தொகை அதிகரிப்பு

(வவனியா)

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களின் தொகை வவனியாவில் அதிகரித்துள்ளது.

ஆயுதப் படையினர் வவனியாவில் அடையாள அட்டை இல்லாதவர்களை விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுவதால், இது இல்லாதவர்கள் இதனைப் பெறுவதற்கு கிராம சேவையாளர் அலுவலகங்களுக்கு படையெடுத்துச் சென்று விண்ணப்பித்துக் கொள்கின்றனர்.

அதே நேரத்தில் புகைப்படப் பிடிப்பு நிலையங்களுக்கும் நல்ல வருமானம் கிடைத்து வருவதாக தெரியவருகிறது.

அடையாள அட்டை இல்லாமல் பொது மக்கள் நகருக்கு வர அச்சப்படுகின்றனர்.

இப்போது வவனியாவில் ஆயுதப்படையினருடைய ரோந்து நடவடிக்கை [illegible] தீவிரமடைந்துள்ளது.

எந்த ஒரு நாட்டுக்கும்

# "தளம் அமைக்க இடம் தரமாட்டோம்"

## பாராளுமன்றத்தில் லலித் உறுதி

(நமது நிருபர் இ. கந்தசாமி)

"அமெரிக்காவுக்கு மட்டுமல்ல வேறு எந்த ஒரு நாட்டுக்கும் இலங்கையில் தளம் அமைக்க அனுமதி வழங்க மாட்டோம். அது மட்டுமல்ல இந்தியாவுக்கு எதிராக இலங்கையின் எந்தப் பகுதியிலும் எவரையும் இயங்க அனுமதி [illegible] தவறான செய்திகளைக் கொடுக்கும் தவறான நிலையைத் தவறான செய்திகளைக் கொடுத்து நிலைமையை மோசமாக்குகிறது என்றும் குற்றம் சுமத்தினார்.

கடந்த வியாழன் இரவு யாழ்ப்பாணத்தில் 500 பேரை இராணுவத்தினர் கொலை செய்ததாக புதுடில்லிக்கு செய்தி ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. லோக சபையில் இலங்கைத் தமிழர் பற்றிய விவாதம் இடம்பெற இருந்த தினம் காலை அவ்விவாதத்தில் இந்திய அரசாங்கத்தையும்பற்றி வற்புறுத்தவே அந்தப் பொய்யான செய்தி அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் அது பற்றி புதுடில்லியிலிருந்து எம்மிடம் விசாரித்தபோது உண்மை

8 ம் பக்கம் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

### பயிற்சி

3 மாத வகுப்பு, மெக்கானிக் மோட்டார் மெக்கானிசம் பயிற்சிகள் ஆரம்பமாகவுள்ளன. நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும் Engineering Education Centre புதிய மேல் மாடிக் கட்டடம் 12 ராமையா செட்டியார் லேன், சாந்தி சினிமா அருகாமை, யாழ்ப்பாணம். 1868

### வகுப்புகள்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழுக்குரிய ரேடியோ T V. வெல்டிங் வகுப்பு, மோட்டார் மெக்கானிஸ வகுப்புகள் ஆரம்பமாகின்றன. குறிக்கப்பட்டளவு மாணவர்களே அனுமதிக்கப் படுவார்கள். The Jaffna Engineering College J E C) 83, Pt Pedro Rd. Jaffna. 1861

### சேவை

விண்ணப்பங்கள், Stencil Cuttings மற்றும் வர்த்தக சம்பந்தமான விபரணங்கள் முதலியன தமிழிலும், ஆங்கிலத்திலும் டைப்பில் செய்து கொள்வதற்கு மக்கள் டைப்பிங் சென்டர், 89/19, மின்சார நிலைய வீதி, 3ம் ஒழுங்கை, (யாழ். பஸ் நிலையத்திற்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். 1828

### தேவை

தெகிவளை, கல்கிசையில் கடை வாடகைக்கு அல்லது விற்பனைக்கு கொடுக்க விரும்புவோர் தொடர்புகொள்ளவும். J. I Jayasingha, 37/1, Beach Road, Mount Lavinia. 1844

### விற்பனைக்கு

நல்லநிலையில் உள்ள சோப் கம்பனி சகல தளபாடங்களும் லேபல் புளக்கும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு (சாப்புறுதி கட்டுக்குரபனக் முன்னுள்ள) S. சுதிரேசன் 656, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 1857

நீர்வேலி மத்தியில் கல்வீடு கிணற்றுடன் 8 1/2 பரப்பு காணியும், 6 பரப்பு வயல் காணியும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு திருமதி சிவபாக்கியம் ஏரம்ப மூர்த்தி சிவானந்த பவனம், நீர்வேலி மத்தி, நீர்வேலி. 1855

கிரைண்டர் தையல் மெஷின் Baby Belling குக்கர். Sharp கறுப்பு/ வெள்ளை T. V 20'' Kenwood Chefette, Portable Typewriter. மேசை மின்விசிறி மற்றும் வீட்டுச்சாமான்கள், Excellent Condition, ஆறுமுக வடிவேல், இருபாலை ரோட் (ஞானபாஸ்கரோதய வாசிகசாலைக்கு அண்மையில்) கல்வியங்காடு. 1859

கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் கண்டி வீதியில் 6 பரப்புக் காணியில், தண்ணீர், மின் வசதியுள்ள கட்டிடம், மரக்காலைச்சல் பட்டடையுடன் விற்பனைக்குண்டு K. அருணாசலம், கட்டைபறிச்சான் கண்டிவீதி, கொடிகாமம். 1851

ஒரு (1) பரப்பு காணி இல. 868/28 இந்து மகளிர் ஒழுங்கை கந்தர்மடத்தில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு V. பரஞ்சோதி, கோதிவு ரோட், நாவற்குழி, கைதடி. 1818

8 ஸ்ரீ 8482 Triumph 8·5 H. P. T 81, மோட்டார் சைக்கிள் (ஓடும் நிலையில்) விற்பனைக்கு உண்டு. திருமதி அழகம்மா, சிமெந்து தொழிற்சாலைக்கு முன்பாக பிரதான வீதி, காங்கேசன்துறை. 1821

---


## உடன் விற்பனைக்கு

### 24 ஸ்ரீ 6225 மொறிஸ் லொறி.

மேற்குறிப்பிடப்பட்ட வாகனத்திற்கான விண்ணப்பம் 16-4-84ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்

விபரங்களுக்கு:
சட்ட அதிகாரி

**த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்,**

TFC

249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 23680



யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## கூட்டுறவு வைத்தியசாலை

### வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்

இல. 1, கண்டி வீதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்திருக்கும் கூட்டுறவு வைத்தியசாலை சகலவித சேவைகளையும், சேவை மனப்பான்மையோடு ஆற்றிவருகிறது.

சகல வசதிகளையும் கொண்ட தனித்தனி அறைகள் உண்டு.

எவ்வித சத்திரசிகிச்சைக்கும் வேண்டிய நவீன வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

கூட்டுறவு அடிப்படையில் குறைந்த கொடுப்பனவில் நிறைந்த சேவை.

யாழ். பல நோ. கூ. சங்கம்
17, கண்டி வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

5 4-84. 1797



## விசேட அறிவித்தல்

### வங்கிச்சேவைகள் பரீட்சை

மத்திய வங்கி, இலங்கை வங்கி, மக்கள்வங்கி, சேமிப்பு வங்கிகளுக்கான எழுதுவினைஞர், உதவிக் காசாளர், தேர்வுக்கான பரீட்சை பிற்போடப்பட்டுள்ளமையால் - அதற்கான

### விசேட வகுப்புகள்

பாடநெறி: பொது அறிவு - பொதுவுளச்சார்பு

**ஆரம்பம்: 11-4 84 காலை 9 மணி**

(வகுப்புகள்தொடர்ந்து 10 நாட்கள் (நாளாந்தம் 8மணி) நடைபெறும்)

- அனுபவம்வாய்ந்த விரிவுரையாளர்கள்
- இலவச பாடக் குறிப்புகள்

**கட்டணம்: ரூபா 100/-**

பாடக்குறிப்புகளைத்தபாலில்பெற விரும்புவோர் Registrar, Astan Institute, Jaffna என்ற பெயருக்கு ரூபா 70/- காசுக்கட்டளையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:

## ASTAN INSTITUTE

166/1, HOSPITAL ROAD, JAFFNA.



## சவுதி அரேபியாவில் உடனடி வேலை வாய்ப்பு

சவுதி, ஜிசான் துறைமுகத்தில் பணிபுரிவதற்கு பின்வரும் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

1. துறைமுக வேலையாட்கள்
   (Labourers) — 100
   சம்பளம் S. R. 600 + உணவு
2. கனரக சாரதிகள்
   (H. V. Drivers) — 40
   சம்பளம் S R 900

★ உணவு, தங்குமிட வசதிகள், வைத்திய பராமரிப்பு ஆகியவை இலவசம்.

யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் எங்கள் வடமாகாண பிரதிநிதி

திரு. C. V. இராஜேந்திரம்

அவர்களை ''அமராவதி'', கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்ற முகவரியில் உடனடியாக சந்திக்கவும்.

**Safeway United & Management Services (Pvt) Ltd.**

P. O BOX 2047, COLOMBO
Labour Licence No. FE / 6 / FEA / 809 / 4504
(1860)


---

## மாவை தமிழ் நாடு பயணம்

(மன்னார்)

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரான திரு. மாவை சேனாதிராஜா தமிழ் நாட்டுக்குப் பயணமானார்.

இவர் தலைமன்னார் - ராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக கடந்த சனிக்கிழமை தமிழ் நாட்டுக்குப் பயணமானார்.

---

## பால்மா அனுப்பிவைப்பு

(மன்னார்)

அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்க என 80 பெட்டிபால்மா அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்பால்மாவை சமூகசேவைகள் திணைக்களம் மன்னார் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது.

---

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உதவிச் சேகரிப்பாளராகக் கடமையாற்றிய திரு. கி. பொன்னையா தலைமன்னார் மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

திரு த. க. கணநாதலிங்கம் யாழ். மாவட்டத்துக்கு உதவிச் சேகரிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (மா)

---

## 'சமூக ஜோதி' மலர் வெளியீடு

(மன்னார்)

மன்னார் மாவட்ட சன சமூக நிலையங்களினால் சமூக ஜோதி என்னும் மலர் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இக்கூட்டம் சமாஜத் தலைவர் ஜனாப் ஏ. காதர் தலைமையில் மன்னார் பட்டின சபை மண்டபத்தில் நடைபெற்றது.

---

## ரூபவாஹினியில் இருகோடுகள் தமிழ்ப்படம்

(கொழும்பு)

ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையில் நாளை புதன்கிழமை இரவு 'இரு கோடுகள்' என்ற தமிழ் திரைப் படம் ஒளிபரப்பப்படவுள்ளது. இப்படத்தில் ஜெமினி கணேசன், சௌகார் ஜானகி ஆகியோர் நடித்துள்ளனர்.

டைரக்டர் கே பாலச்சந்தரால் இப்படம் டைரக்ட் செய்யப்பட்டுள்ளது.

'எதிர் நீச்சல்' என்ற தமிழ்ப் படமும் ரூபவாஹினியில் ஒளிபரப்புவதற்காக சென்னையிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளது (வெ)

---

## 'பி—ஜி 401' விதை நெல்

(மன்னார்)

பி-ஜி 11 இன விதை நெல்லுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் அண்மையில்பெய்த பெருமழையைடுத்து ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பி ஜி 401 இன விதை நெல்லை வழங்க அரச இணக்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு மன்னார் கச்சேரியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய விவசாய அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் திரு ரஞ்சன் விஜயரட்ண தெரிவித்தார்.

---

## க்ஷயரோக நிவாரண உதவிப் பணம் நிறுத்தம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் க்ஷயரோகநிவாரண உதவிப்பணம் பெற்று வந்த சுமார் 50க்கும் மேற்பட்ட க்ஷயரோக நோயாளிகளுக்கு க்ஷயரோக நிவாரண உதவிப்பணம் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் வறுமையுடன் வாழ்ந்துவந்த க்ஷயரோக நோயாளிகள் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

---


# VACANCY

## Collection Officer

Seeking for a Suitable Person for the above Post with Security deposit.
Apply to

**37, Pirapankulam Lane, Jaffna.**

1856



# Diploma in Management

(முகாமைக் கற்கை நெறி) மொழி ஆங்கிலம்

க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சிக் காலம் 6 மாதங்கள்

முகாமை, கணக்கீட்டுப்பீடு, கணக்காய்வு ஆகிய துறைகளில் பூரணப் பயிற்சியளித்துக் பயிற்சி நெறி முடிவடைந்ததும் சுயமாக நிறுவனங்களின் வருமான கணக்கை எழுதும் ஆற்றலைப் பெறுவீர்கள்

**2-வது பிரிவு ஆரம்பம்: 14-4-1984**

## Diploma in Electrical Engineering

க. பொ. த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

செய்முறைப் பயிற்சியுடன் யாழ். நகரில் எமது கல்லூரியில் மட்டுமே இப்பயிற்சி நெறி நடைபெறுகின்றது

பயிற்சிக் காலம் 6 மாதங்கள்

**3-வது பிரிவு ஆரம்பம்: 14-4-1984**

விபரக்கொத்தும் விண்ணப்பப்பத்திரத்தினையும் ரூபா 10/- செலுத்தி நேரில்/தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:

பணிப்பாளர்,
தொழிற் கல்விச் சேவைகள் பிரிவு,
**பட்டப்படிப்புகள் கல்லூரி.**
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குண்டும் குழியுமாக வீதிகள்

(சரவெட்டி)

தெல்லிப்பழை சரவெட்டிப் பகுதியிலுள்ள பிரதான வீதிகள் குண்டும் குழியுமாக உள்ளன.

இவற்றைத் திருத்துவதற்காக இங்கு கற்கள் பறிக்கப்பட்டும் இப்பகுதி வீதிகள் திருத்தப்பட்டும் திருத்தப்படாதநிலையில் உள்ளன.

# காங்கேசன் துறைமுக வேலைகள் ஸ்தம்பிதம்!

(மானிப்பாய்)

காங்கேசன் துறை துறைமுக வேலைகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. நிதிபற்றாக்குறைவு காரணமாகவே இவ்விதம், பல வருடகாலமாக நடைபெற்று வந்த இந்த துறைமுக அபிவிருத்தி வேலைகள் நிறுத்திவைக்கப் பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

குறிப்பாக இறங்குதுறைப் பகுதிக்காக செய்யப்பட்டு வந்த வேலைகள் இதன்காரணமாக அரைகுறையில் இருப்பதோடு இதற்காக செலவிடப்பட்ட தொகையும் வீணாக்கப் பட்டுள்ளதுபோல் தற்போது கருதப்படுகிறது.

வேலைகள் இடைநிறுத்தம் காரணமாக பல ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

## யாழ்ப்பாண மாவட்ட மேலதிகப் பதிவாளர்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண மாவட்ட மேலதிக பதிவாளராக திரு எஸ் இராசையா இம்மாதம் முதல் நியமனம் பெற்றுள்ளார்.

பதவி உயர்வுடன் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்று வந்துள்ள இவர் கொழும்பு பதிவாளர் அலுவலகத்தில் கடமையாற்றி வந்தவராவர்.

1977க்கு முன் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் லிகிதராகக் கடமையாற்றிய திரு இராசையா தொழிற்சங்கவாதியாகவும், அரசியலதிகாரியின் செயலாளராகவும்கடமையாற்றியவர் ...





உற்பத்தியிலும் வர்ண வேற்றுமை களிலும், சப்தமறு
பூரணத்துவம் அளிப்பது அத்தோடு VCR வீடியோ விள்யாட்டு, வீடியோ தட்டுக்கள்
இணைப்பு உறுப்புக்கள் கொண்டது.

PHILIPS

ZENITH

இலங்கையில் ஏகப்பிரதிநிதிகள்

ஹேய்லீஸ் லிமிட்டெட்.

காட்சி அறைகள்: கொள்ளுப்பிட்டி தொலைபேசி: 86958
திர்வை அற்ற சந்தைத்தொகுதி தரைமாடி கடை இல(2)

நாம் பிலிப்ஸ் உடன் இணைந்து சிறந்ததையே வழங்குவோம்

இலகு தவணையில் செலுத்த ஒழுங்குசெய்யப்படும்

வர்ண TV
14" 287 டாலர் ரூபா 11 400/-
16" 825 டாலர் ரூபா 12,500/-
20" 400 டாலர் ரூபா 15,500/-
26" 550 டாலர் ரூபா 23 500/-

உத்தரவாத காலங்கள்...

கறுப்பு/வெள்ளை TV
12" 90" டாலர் ரூபா 3,095/-
14" 112" டாலர் ரூபா 3,850/-
17" 148" டாலர் ரூபா 5,800/-

ரெலிவிஷன்செற்ஸ்-1 வருடம்

பிலிப்ஸ் VHS வீடியோகஸெற் றெக்கோடர் 420 டாலர் TC

காட்சிக் குழல்-3 வருடங்கள்


## இன்றைய பலன்

பங்குனிமாதம் 28ம் திகதி
(10-4-1984)
செவ்வாய்க்கிழமை

மேடம்: கணவன் மனைவி உறவுமுறை பூசல்கள் நிறைந்ததாக இருக்கும் இதயபாரம் வேதனைபடுத்தும் நிதானம் இருப்பின் எதையும் சமாளிக்கலாம்.

இடபம்: வணிகர்களுக்கு வியாபார விருத்தியும் காதலர் வாழ்வில் சந்தோஷமான தினம் உறவினர் உதவிக்கும் இடமுண்டு.

மிதுனம்: தூக்கம் விழிகளை தழுவ மறுக்கும் சகோதர வழியால் சஞ்சலப்படக்கூடிய செய்திக்குமிடமேற்படும்

கடகம்: தாய்வழி மூலம் தனவரவுண்டு கல்வி கற்போர் உற்சாகமடைவர் வாகனச் சாரதிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும்

சிம்மம்: தொழில்புரியுமிடத்தில் செல்வாக்குப் பெருகும் புத்திரவழிச் சுகத்திற்குமிடமுண்டு சிலருக்கு காதல் விவகாரம் தலைதூக்கும்.

கன்னி: சிலருக்கு நூதன ரோகமும் தென்படலாம் தொழிலுக்கு நஷ்டம் உண்டாகலாம இடப்பிரிவும் உண்டு உடல் சுகாதாரம் வேண்டும்

துலாம்: களஸ்திர வழியாலும் நன்மைகள் கிடைக்கும் வாழ்க்கையில் தென்றல் வீசும் தொழிலும்சிறப்புறும்சுபதினம்

விருச்சிகம்: அவசரப்போக்கு ஆபத்தை விளைவிக்கும் பொருளும் பலவழிகளில் செலவாகும் தொழிலிலும் தொல்லைகள் தோன்றும் பொறுமை வேண்டும்.

தனுசு: தந்தைவழிப் பெருமையும் உண்டு ஸ்தலயாத்திரை மேற்கொள்ளப்படலாம் குடும்பத்திலும் மகிழ்ச்சிதென்படும்.

மகரம்: தொழில் புரியும் இடத்தில் செல்வாக்குப் பெருகும் நண்பர்கள் மூலம் இதமான செய்தியும் கிடைக்கும் மகிழ்ச்சிகரமான தினம்

கும்பம்: உழைப்பிலும் முன்னேற்றம் உண்டு சகோதரவழியாலும் சுகமுண்டு வரவில் திருப்தி காணும் சுபதினம்

மீனம்: தந்தை வேகத்தில் காரியங்கள் நகர்ந்து கொண்டிருக்கும் வேண்டாத தொடர்பால் தவறான போக்குக்கும் இடமுண்டு உஷார் விரும்பத்தக்கது.

திருமலை
வே ரவீந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்திலிருந்து

இ. கந்தசாமி

# அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை

## தமிழ் தீவிரவாதிகள் பற்றி தாராளமாக இடம்பெற்றது

இன்றைய அரசாங்கம் விலைவாசி உயர்வால் பொருளாதாரச் சீரழிவு, கலப்புப் பணவீக்கம், நீர்வரி, புனரமைப்புவரி, மின்சார மேலதிக அறவீடு, வைத்திய நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் சமூக நலன்புரி உதவிகளை நீக்கியவற்றின் மூலம், மக்களின் வாழ்க்கைத்தரம் கீழ்நிலைக்குத் தள்ளப்படுவதை மேற்கொண்டும் தடுக்கத் தவறிவிட்டது.

சுதந்திரமான நீதிபரிபாலன நடைமுறைக்கு உத்தரவாதம் அளிக்கவும், நாட்டின் சட்டச் செயற்பாட்டு இயந்திரம் சிதைவுறுவதைத் தடுப்பதற்கும் தவறிவிட்டது.

குறிப்பாக வடக்குக் கிழக்குப் பகுதிகள் உட்பட நாடு பூராவும் அதிகரித்துவரும் பயங்கரமான குற்றச்சம்பவங்களை நிறுத்தத் தவறிவிட்டது.

பல்தேசிய நிறுவனங்களுக்குச் சுதந்திரம் அளித்ததன் விளைவாய், நாட்டின் அரச, அரசாங்கச் சார்பான, தனியார்துறை சார்ந்த நிறுவனங்களின் உற்பத்தி, வியாபார வர்த்தக முயற்சிகள் தரம் குன்றுவதைத் தடுத்துநிறுத்துவதற்கும் தவறிவிட்டது.

தொழிலாளர்களின் சட்டபூர்வ உரிமையான வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட அரசாங்க, கூட்டுறவு, தனியார் துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்ததன்மூலம், அம்மக்களின் உரிமை துஷ்பிரயோகம் செய்வதைத் தடுப்பதற்கும் தவறிவிட்டது.

ஊழல், வீண்விரயம் ஆகியன வரம்பு கடந்து செல்வதைத் தடுப்பதற்கும் தவறிவிட்டது.

சட்டவிரோதக் கூட்டம் போதைவஸ்துப்பாவனை முதலானவை அதிகரித்துவருவதைத் தடுப்பதற்குப் பயன்தரத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளாததன் மூலம் நாட்டின் கலாசார தாற்பரியத்தைப் பேணுவதற்கும் தவறிவிட்டது.

போக்லாந்து தீவுகள் கிரெனெடா பற்றிய ஐ. நா. பொதுச்சபையின் வாதம் மீது ஐ. நா. பொதுச்சபையில் வாக்களித்ததன்மூலம் அணிசேராக் கொள்கை கடைப்பிடிக்கத் தவறிவிட்டது.

ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் விசாரணை ஆணைக்குழுக்கள் ஆகியவற்றின் அறிக்கைகளை வெளியிடத் தவறிவிட்டது.

பரீட்சைத் திணைக்கள மோசடிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழகக் கல்வி நிலையங்கள் போன்ற நிலையங்களில் குழப்ப நிலைகளைத் தவிர்க்கத் தவறிவிட்டது.

இக்காரணங்களால் அரசின் மீது நமக்கு நம்பிக்கை இல்லை.

எதிர்க்கட்சி உறுப்பினர்களான அனுரா பண்டாரநாயக்கா, லக்ஷ்மன் ஜயக்கொடி, ஆனந்த தஸநாயக்க, ரிச்சார்ட் பத்திரண, அமரசிறி தொடங்கொட, அனில் முனசிங்க, மைத்திரிபால சேனநாயக்கா, எம். ஹலீம் இஷாக் ஆகியோர் பாராளுமன்றத்தில் அரசுக்கு எதிராகக் கொண்டுவந்து தோற்கடிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை இதுதான்.

தோல்வி எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆனால் விவாதம் பயனுள்ளதாகவே அமைந்திருந்தது.

அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டால் எதிர்க்கட்சியினர் விவாதத்தை ஆரம்பித்து வைத்து தமது பிரேரணைக்கு ஆதரவாக அரசின் தவறுகளைச் சுட்டிக்காட்டியும் தமது நிலையை எடுத்துக்காட்டியும் விவாதிப்பர்-அரச தரப்பினரோ குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் அளிப்பதுடன் தமது சாதனைகளையும் எடுத்துரைப்பர்.

இருதரப்பு விவாதங்களையும் சீர்தூக்கிப்பார்க்கும் இருதரப்பினரும் சுதந்திரமான—நியாயமான தீர்ப்பு வழங்குவர்.

நம்பிக்கையற்ற பிரேரணை மீதான விவாதத்தின் இத்தாத்பரியத்தை இன்றைய காலகட்டத்தில் எந்த ஒரு சபையிலாவது எதிர்பார்க்கலாமா?

இதன் விடை நிச்சயம் பூஜ்யமே.

### 3-வது நம்பிக்கை இல்லாப் பிரேரணை

77-ம் ஆண்டு பதவி ஏற்ற இந்த அரசுக்கு எதிராகக் கொண்டுவரப் பட்ட மூன்றாவது நம்பிக்கையற்ற பிரேரணை இது. தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்கட்சியிலிருந்த போது அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தினால் இரு தடவைகள் நம்பிக்கையற்ற பிரேரணை சமர்ப்பிக்கப் பட்ட போதிலும் அவற்றை விவாதிக்க சபாநாயகர் அனுமதி அளிக்க மறுத்து விட்டார்.

அரசியல் மாற்றத்தினால் அனுரா எதிர்க்கட்சித் தலைவராக வந்தபின்னர் கொண்டுவந்த நம்பிக்கையற்ற பிரேரணையை விவாதிக்க அனுமதி கிடைத்தது.

அனுரா கவலையோடு தான் கூறினாரோ - பெருமிதத்துடன் சொன்னாரோ தெரியவில்லை தனது உரையின் ஆரம்பத்தில் அனுரா இது பற்றியும் பிரஸ்தாபித்திருந்தார்,

இலங்கைப் பாராளுமன்றத்தில் அரசுக்கு எதிரான நம்பிக்கை இல்லாப்பிரேரணைமீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த அதே வேளையில் எமது அண்டைநாடான இந்தியாவில் இலங்கை அரசின் நடவடிக்கைகளுக்கு எதிரான பிரேரணை ஒன்றின் மீதான விவாதம் நடைபெற்றது.

இதனால்தானோ என்னவோ எமது சபை விவாதத்தில் பயங்கரவாதம், தமிழ் சமூக கோரிக்கை, நாட்டின் பாதுகாப்பு ஆகியவற்றின் ஊடாக இலங்கை-இந்திய உறவு, இந்தியாவின் - குறிப்பாக தமிழ் நாட்டின் நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன.

### தமிழ் தீவிரவாதிகள் ஆயுதப் பயிற்சி

தமிழ் தீவிரவாதிகள் தமிழகத்தில் பயிற்சி முகாம்களில் ஆயுதப் பயிற்சி பெற்று வருவதாக அண்மைக்காலமாக இலங்கை-இந்திய மற்றும் வெளிநாட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் மீண்டும் இவ்விவாதத்தில் பல எதிரொலித்தது

இந்தியா மீது சரமாரியான குற்றச்சாட்டுக்கள் இந்திய ஆதரவு பேச்சுக்களும் இடம் பெறாமல் இல்லை.

இலங்கை அரசைக் கவிழ்ப்பதற்கு தமிழகத்திலிருக்கும் இலங்கைத் தமிழ் இளைஞர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகக் கூறிய அமைச்சர் முகமட், நாட்டை நோக்கி தமது பாணத்தை பின்வருமாறு தொடுக்கிறார் தமிழகத்தில் ஸ்ரீ கார்கள் ஓடுகின்றன.

அமிர் மற்றும் முன்னணி கூட்டணி எம். பிக்களுக்கும் தமிழ் நாட்டில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன அவர்கள் அங்கிருந்து கொண்டே இலங்கை அரசுக்கு எதிராகப் பிரசாரம் செய்கின்றனர் தமிழ் தீவிரவாதிகளுக்கு இந்தியாவில் பாஸ்போர்ட் வழங்கப்பட்டுள்ளது இலங்கைத் தமிழர்கள் பாஸின்றி தமிழகத்தில் நடமாடுகிறார்கள். இலங்கையில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் தமிழகத்தில் கைப்பற்றப்பட்டு கொள்ளையர்களும் நால்வர் கைதுசெய்யப்பட்டனர்.

கொள்ளை நகைகள் என்று தெரிந்திருந்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கொள்ளையர்களும் சொந்தப் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளனர்.

தமிழ் நாட்டினருக்கு இலங்கைத் தமிழர்கள் மீது அக்கறை. அதற்காக தீவிரவாதிகள் பயிற்சியை பெறுவதற்கும் இலங்கை அரசைக் கவிழ்க்கும் முயற்சி எடுக்க அனுமதிக்கமுடியுமா?

### இந்திய அரசுமீது குற்றம் சுமத்தவில்லை

[illegible] —இந்திய அரசு மறுப்புமுக யுமா என்றும் கேள்வி எழுப்பிய அமைச்சர் மொகமட், இந்திய அரசுமீதோ திருமதி இந்திரா மீதோ குற்றஞ்சுமத்தவில்லையென்றும் இந்தியாவுடன் சிறந்த நட்புறவையே அரசு விரும்புவதாகவும் கூறினார்

இந்திய அரசு இலங்கையைக் கண்டித்துவருகிறது. அதே வேளையில் இலங்கை நியாயமாகவே நடந்து கொள்கிறது முகமட் கூறியதும் அவரது பேச்சில் குறுக்கிட்ட அனுராவுக்கும் முகமட்டுக்கும் இடையில் சிறுசொற்போர்-

அனுரா: திருமதி காந்தி ஒருபோதும் இலங்கை அரசைக் கண்டிக்கவில்லை. இவ்வாறு நீங்கள் கூறக்கூடாது

முகமட்: திருமதி காந்தியைக் கூறவில்லை இந்திய அரசைத்தான் குறிப்பிடுகிறேன்.

அனுரா: இந்திய உறவை பாழ்படுத்திவிட்டீர்கள் மேலும் நாசமாக்க முயல்கிறீர்கள்.

முகமட்: நீர் இந்தியப் பிரஜையல்லவே.

அனுரா: நான் இலங்கைப் பிரஜை என்பதில் பெருமையடைகிறேன்.

நாடு தேசிய- சர்வதேசிய நெருக்கடியில் சிக்குண்டிருக்கும் இவ்வேளையில் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்திருப்பது கவலைக்குரியது உலகில் எந்த ஒரு நாட்டிலுமே இப்படி இடம் பெறுவதில்லை- இது கல்வி அமைச்சரின் குற்றச்சாட்டு.

அவரது குற்றப்பட்டியலும் தொடருகிறது-

71 கிளர்ச்சியை அடக்க அன்றைய அரசு எடுத்த நடவடிக்கைகளை அன்று எதிர்க்கட்சியிலிருந்த ஐ. தே. க. ஆதரித்தது இன்றைய தேசிய நெருக்கடியின் போது எமது அரசை ஒரு பலவீனமான அரசு எனக்காட்டுவதற்காக நம்பிக்கையற்ற பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது-

### இலங்கைக்கு எதிராகச் சதிமுயற்சிகள்

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவில்- ஐரோப்பாவில்- இந்தியாவில் சதி முயற்சிகள் இடம்பெறுகின்றன. இந்தியாவில் திமுகவினர் தீவிரமாக எமது அரசுக்கு எதிராகச் செயல்பட்டுவருகின்றனர். தமிழகத்தில் தமிழ் இளைஞர்களின் பயிற்சி முகாம்கள் இருப்பது எமது நாட்டுக்குமட்டுமல்ல இந்தியாவுக்குக்கூட ஆபத்தானதே-

ரணிலுக்கு பெருஞ் சந்தேகம் ஏற்பட்டது-

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இந்திய லோகசபையில் தி மு க.வினர் எழுப்பிய பிரேரணை மீது வாக்கெடுப்பு விவாதிக்கப்படும் வேளையில் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டுவந்திருக்கும் சுதந்திரக்கட்சியினர் தமிழ் பயங்கரவாதிகளுடனும் திமுகவினருடனும் தொடர்பு கொண்டுள்ளனரா?

### சொற்போர்

எதிர்க்கட்சியினரின் உரை [illegible] யாது [illegible] இடையிட்டு சில தடவைகளில் கல்வியும் புகட்டும் கல்வி அமைச்சர் அன்று இரு தடவைகள் குறுக்கிட்டு சிறு சொற்போர்களை நடத்தினார்.

நாட்டின் ஊழலையும் விரயத்தையும் ஒழிக்கவும் சிறப்பான நிர்வாகத்திற்கும் உயர்மட்ட நிர்வாகி ஒருவரை நியமிக்கவேண்டும் என கோரும் 12 பக்கங்களைக்கொண்ட மகஜர் ஒன்றை கல்வி அமைச்சர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருக்கிறார் கல்வி அமைச்சருக்கே இந்த அரசு மீது நம்பிக்கை இல்லை இதன்மூலம் அவர் ஒரு நம்பிக்கை இல்லாப் பிரேரணைக் கொண்டுவந்துவிட்டார். அவருக்கு உதவும் வகையிலேயே தமது கட்சி இப்போது இப்பிரேரணையைக் கொண்டுவந்திருக்கிறது என்று கூறிய கொழும்பு மத்தி ஹலீம் இஷாக், அந்த மகஜர் பற்றிய பத்திரிகைச் செய்தி ஒன்றை வாசித்துக்காட்டினார்.

விசுக்கென்று எழுந்த ரணில் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பியது உண்மை. அமைச்சர்களுக்குமேல் உயர் நிர்வாகி நியமிக்குமாறு கேட்கவில்லை. என்றவாறு மறுத்த போது சபையில் சிறிது நேரம் இரைச்சலுடன் கூடிய வார்த்தைப் பரிமாறல்கள். சபாநாயகர் தலையிட்டு அமைதியை நிலைநாட்டினார்.

இறுதியாக உரையாற்றிய அனுரா தமது உரையின் கடைசிக்கட்டத்தில் சில அமைச்சர்களை மனதில் வைத்துக்கொண்டு அழகான கிண்டல் ஒன்றை உதிர்த்ததும் மீண்டும் எழுந்தார் ரணில்.

அனுராவின் பொருள்பதிந்த கிண்டல் இதுதான்—

### ஜனாதிபதியின் வாரிசு

"ஜனாதிபதி தமக்கு வாரிசு ஒன்றைத் தெரிவுசெய்துவிட்டார். அவர்தான் தேசியபாதுகாப்பு அமைச்சர் லலித் அவரது கைகளுக்குள்ளேயே இன்று நாடு இருக்கிறது. அவர் ஒரு றோயல் கல்லூரி என்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

"புலன்புர, உதாகம, மாபொல என்றெல்லாம் அரசின் பணத்தை செலவழித்துபோஸ்டர்கள் அடித்து சுயவிளம்பரம் தேடிக்கொள்பவர்கள் இனிமேல் பேசாதிருக்கலாம்"

இதனைக்கேட்டதும் கொதித்தெழுந்தார் மற்றொரு றோயலிஸ்டான ரணில் -

மீண்டும் ஒரு சொற்போர். அரசின் பின்வரிசை உறுப்பினர்களும் சேர்ந்துகொண்டனர், ஒரே இரைச்சல் இடையில் 'மனநோயாளர்' மனநோய் ஆஸ்பத்திரிக்குத்தான் அனுப்பவேண்டுமென்ற சொற்பிரயோகங்களும் இடம்பெற்றன.

போர் புரிந்த இருவருமே பழைய றோயலிஸ்ட் பிரமச்சாரிகள். இளம் இரத்தங்கள் துடித்தன.

இலங்கை விவகாரம், தமிழ் தீவிரவாதிகள் குறித்துக் கட்டுரை ஒன்றை வெளியிட்ட 'புரொப்' (Probe) என்ற இந்திய சஞ்சிகை ஒன்றைக்கையில் வைத்துக்கொண்டு வாசித்தவாறு வாதிட்டார் மகாகம தினேஷ்.

"இன்றைய அரசின் தவறான நடவடிக்கைகளே சமூகப் போராட்டத்தை வலுப்படுத்தியது.

"தென்னிந்தியாவில் இலங்கையின் துணைத்தூதுவராக இருப்பவர் இதுவரை ஒரு தடவை தமிழக முதல்வரை சந்திக்கவும் இல்லை- தமிழ்ச்சமூகப் பிரச்சினை குறித்து அவருக்கு எடுத்துக் கூறவுமில்லை—

"எமது வெளிநாட்டமைச்சு செயலற்றிருக்கின்றது— என்றவாறு குற்றச்சாட்டுகளை சரமாரியாக [illegible] இலங்கை [illegible] வெளிவிவகாரத்தில் [illegible] தம் பொறுப்புகளை—

(8-ம் பக்கம் பார்க்க)

இவ் இனிய புத்தாண்டில்
ஹோம் பிறன்ஸ்
ஸ்தாபனத்தார் மகிழ்ச்சியுடன் அறிமுகப்படுத்தும்
புதிய உல்லாச பஸ்கள்
முதற் பயணம்
11-4-84 புதன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு
15-4-84 ஞாயிறு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான சேவை
மேலதிக விபரங்களுக்கு:
ஹோம் பிறன்ஸ் லிமிட்டெட், 463, காலி வீதி, கொழும்பு-3 தொலைபேசி: 599190
ஹோம் பிறன்ஸ் லிமிட்டெட், 82, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இந்தியாவைப் பிளவுபடுத்த வல்லரசுகள் முயற்சி"



## பிரதமர் இந்திரா குற்றச்சாட்டு

றிப்போலி ஏப். 9

"இந்தியாவில் பிரச்சினைகளை உருவாக்கி நாட்டைக் கூறுபோட சில வல்லரசுகள் முயன்று வருகின்றன" என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

லிபியாவில் இரண்டு நாள் அரசமுறைப் பயணத்தை முடித்துக்கொண்டு ரீயூனீசியாவுக்குச் செல்லும் முன்பாக அவர் றிப்போலி விமான நிலையத்தில் வைத்து இதனைத் தெரிவித்தார்.

இந்தியா கடைப்பிடித்து வரும் அணிசேராக்கொள்கை, சமாதானத்தை நிலைநாட்டும் முயற்சி, மூன்றாம் உலகநாடுகளின் வளர்ச்சியில் அக்கறை ஆகிய நடவடிக்கைகள் சில வல்லரசுகளின் ஆதிக்கப்போக்குக்கும் சுரண்டலுக்கும் பெரும் தடையாக இருந்துவருகிறது. அந்நாடுகள் இந்து சமுத்திரத்தில் ஆதிக்கம் செலுத்த முடியாமலும் இருக்கிறது.

"இதனால் இந்தியாவினைத் துண்டாடும் முயற்சியில் இவை தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

"இனம், மதம் என்ற பெயரால் குரோதங்களை ஏற்படுத்தி நாட்டுக்குள் வன்செயல்களை உருவாக்குகின்றன. இந்தியாவின் தனித்துவத்தினை குறைத்துத் தமது அபிலாஷைகளை நிறைவேற்ற அந்த நாடுகள் முயல்கின்றன" என்றார்.

வல்லரசுகள் என்று குறிப்பிட்டபோதும் நாடுகளின் பெயரைச் சொல்ல இந்தியப் பிரதமர் மறுத்துவிட்டார். (சு)

## சனத்தொகைப் பெருக்கமும் 3ம் உலகநாடுகளை பாதிக்கிறது

புதுடில்லி, ஏப் 9

'அணுவாயுத அழிவு மட்டுமல்ல சனத்தொகைப் பெருக்கமும் மனித குலத்தை அச்சுறுத்துகின்றன" இவ்வாறு சனத்தொகை அபிவிருத்திக்கான ஆசிய பாராளுமன்ற உறுப்பினர்களின் முதலாவது மகாநாட்டில் பொதுச் செயலாளர் சத்போல் மித்தால் தெரிவித்தார். இம்மகாநாடு புதுடெல்லியில் சமீபத்தில் நடைபெற்றது.

இன்றைய பிராந்தியத்தில் சனத்தொகை பெருக்கம் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது. தெற்காசியாவில் 1960ல் 59 கோடி 18 லட்சமாக இருந்த சனத்தொகை 1980ல் 94 கோடி 41 லட்சமாக அதிகரித்துள்ளதை அவர் உதாரணம் காட்டினார்.

குடும்பக் கட்டுப்பாட்டு குறித்த சமூகத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட போதும் சனத்தொகைப் பெருக்கம் கட்டுமீறி நிற்கிறது. 1981-1982ல் இது 2.18 சதவீதம் ஆக இருந்தது.

இதனால் கல்வியறிவின்மை, தொற்றுநோய், அடிப்படை வசதிகள் இல்லாமை, சுகாதார வசதிக்குறைவு, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றினால் இந்நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

சனத்தொகை வளர்ச்சி காரணமாக வளர்முக நாடுகளின் சமூக-பொருளாதார வளர்ச்சித் துறையிலான முயற்சிகள் குறைந்துள்ளன. இந்நாடுகளின் இன்றைய பிரச்சினைகள் யாவும் காலனியாதிக்கம் விட்டுச் சென்றவற்றின் விளைவுகளே, என்றும் அவர் கூறினார். (சு)

## "ஐரோப்பாவிலிருந்து அமெரிக்க ஏவுகணைகள் அகற்றப்படும்வரை ஆயுதக் குறைப்பு பேச்சுக்கள் இல்லை'!

மாஸ்கோ, ஏப் 9

"ஐரோப்பாவில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் நூறாஸ் நடுத்தர ஏவுகணைகளை அமெரிக்கா அகற்றிக் கொள்ளாத வரை சோவியத்யூனியன் அணு ஆயுதக் குறைப்பு சம்பந்தமான ஜெனிவாப் பேச்சுக்களில் கலந்துகொள்ள மாட்டாது" என்று சோவியத் தலைவர் கொன்ஸ்ரன்ரின் ஷெனன்கோ தெரிவித்துள்ளார்.

அவர் சோவியத் உத்தியோகபூர்வ ஏடான 'பிராவ்டா'வுக்கு அளித்த பேட்டியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"அமெரிக்கா அணுஆயுத உற்பத்தியை அதிகரித்துக் கொண்டு, மறுபுறம் பேச்சுவார்த்தையை ஆதரிக்கிறது. இது ஒரு முரண்பாடான நிலையாகும், ஜெனிவாப் பேச்சுக்கள் முறிவடைந்தமைக்கும் சோவியத்துக்கும் எதுவித தொடர்புமில்லை. உண்மையில் மேற்கு ஐரோப்பாவில் அமெரிக்க ஏவுகணைகள் பரம்பியதைத் தொடர்ந்தே சோவியத் யூனியன் பேச்சுக்களிலிருந்து வெளியேறியது. பேச்சுக்கள் மீண்டும் தொடங்க வேண்டுமாயின் அமெரிக்க ஏவுகணைகளை அகற்றிக் கொள்ள வேண்டும்" என்றார்.

"சோவியத்யூனியன் உலகில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக ஆயுதக்குறைப்பு பேச்சுக்களை ஆதரிக்கிறது. ஆனால் அமெரிக்கா அணு ஆயுதங்களை அதிகரித்துக்கொண்டு சமாதானத்தைச் சீரழிக்கும் பயனற்ற முயற்சிகளில் ஈடுபடும்போது சோவியத் யூனியனும் தனது நிலையை மாற்ற வேண்டியது அவசியம்" என்றார். (சு)

இலங்கையின் இனப் பிரச்சினை:

## சிரேஷ்ட அமைச்சரின் இந்திய விஜயம்: சுமுகமான தீர்வுக்கு வழிவகுக்கும்!

### இந்திய பாதுகாப்பு அமைச்சர் நம்பிக்கை

சென்னை, ஏப். 9

"இலங்கையின் இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை, பரஸ்பர நம்பிக்கை அடிப்படையிலேயே தீர்த்துவைக்கமுடியுமென்று இந்தியப்பாதுகாப்பு அமைச்சர் திரு ஆர் வெங்கட்ராமன் குறிப்பிட்டுள்ளார்.

தென்சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் மாவட்டக் கமிட்டிக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

"இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்திய இராணுவத்தை அங்கு அனுப்புமாறு சிலர் கோருகின்றார்கள். இது அவர்களின் அறியாமையைக் காட்டுகிறது.

"விரைவில் இந்தியாவுக்கு வரவிருக்கும் இலங்கையின் சிரேஷ்ட அமைச்சரின் விஜயத்தின் போது இலங்கைப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்கான வழிகள் ஏற்படுமென்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

"இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இராணுவத்தை அனுப்பாமல் விசேட தூதர் ஒருவரை அனுப்பி பிரச்சினையைத் தீர்க்கமுனைந்த பிரதமர் இந்திராவின் ராஜதந்திரத்தை முழு உலகமுமே போற்றுகிறது" என்றும் அவர் குறிப்பிட்டார். (சு)


பரீட்சைப் பெறுபேறுகளைத் தொடர்ந்து மாணவர்கள் மனந்தளராது

84 Decemberல் உறுதியான முடிவுகளைப் பெற

தம்மைத் தயாராக்கிக்கொள்வதற்கான

**8 மாதகால தீவிரப் பயிற்சி வகுப்புகள்**

| அதிகாலை நேர வகுப்பு | பகல் முழு நேர வகுப்பு DAY CLASS | மாலை நேர வகுப்பு |
| --- | --- | --- |
| கிழமை நாட்களில் காலை 6-00- 7-30<br>சனி, ஞாயிறு காலை 9-15-12-00<br>ஏப்ரல் 18-ல் ஆரம்பம் | காலை 8-00—பி. ப. 1-15 வரை<br>எட்டுப்பாடங்களும் போதிக்கப்படும்<br>ஏப்ரல் 16-ல் ஆரம்பம் | கிழமை நாட்களில் பி.ப. 4-15-6-00<br>சனி, ஞாயிறு காலை 6-00-8-45<br>ஏப்ரல் 28-ல் ஆரம்பம் |

THE EXPRESS INSTITUTE KOPAY

மேலதிக விபரங்கட்கு:

எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரியூட், இருபாலை. கோப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

